**குளித்தலை நகராட்சி**

31.07.2019.ஆம் தேதி புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக்கூட்டம்

ஆணையர் மற்றும் தனி அலுவலர்(பொ)
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்–01. குளித்தலை நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர்(பொ) அவர்களின் ஜுலை–2019.ஆம் மாத தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்–02. குளித்தலை நகராட்சியில் குடிநீர் விநியோகத்தில் குளோரினேசன் செய்வதற்கு சோடியம் ஹைப்போ குளோரைடு திரவம் சப்ளைசெய்ய 19.07.2019.ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விபரம் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனங்களின் விபரம் | மதிப்பீடு ரூ.7.20 லட்சத்திற்கு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | குடிநீரில் குளோரினேசன் செய்ய தகுதியான சோடியம் ஹைபோ குளோரைட் (5–6%) திரவம் சப்ளைசெய்தல் | 1). பாலாஜி & கம்பெனி, 4/39,புவனேஸ்வரிநகர், சித்தனூர், தளவாய்பட்டி, சேலம். | 0.06 % அதிகம் |
| | | 2). ராஜகணபதி கெமிக்கல்ஸ், தளவாய்பட்டி, சேலம். | 0.95 % அதிகம் |

அலுவலக குறிப்பு– 1). பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதத்திலான மதிப்பீட்டிற்கு 0.06% அதிகம் உள்ள வரிசை எண். 1ல் ஆன பாலாஜி & கம்பெனி, நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1121/2019/இ1)

பொருள்–03. குளித்தலை நகராட்சி தெருவிளக்கு பணிகளுக்கு தேவையான மின் உபகரணங்கள் சப்ளை செய்தல் பணிக்கு M/s.பாண்டியன் எலக்ட்ரிக்கல்ஸ், குளித்தலை நிறுவனத்தாருக்கு பணி உத்தரவு 28.06.2019.ல் வழங்கி மின் உபகரணங்கள் பெறப்பட்டது. தற்போது மின் பணியாளர்களின் 19.07.2019 தேதிய விண்ணபத்தின்படி தெருவிளக்கு பணிக்கு தேவையாக உள்ள,
(1).250W S.V.பல்ப்–15, (2). 250W S.V.சோக்கு–20, (3). 250W S.V.இக்னேட்டர்–20 ஆகியவற்றை மதிப்பீட்டிலான தொகைக்கு உள்ளடக்கி மேற்படி M/s.பாண்டியன் எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனம்மூலம் பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.261/2019/இ1)

பொருள்–04. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு கொசு ஒழிப்பு பணிக்காக கொசு புழுக்களை ஒழிப்பதற்கு 2019–2020.ம் ஆண்டுக்கு அரசு அங்கீகாரம் பெற்ற Paramount Pesticids Limited, சென்னை நிறுவனத்திடம் "பேசில்லஸ் துரின்ஜியென்ஸிஸ்'' கொசு புழுக்கொல்லி மருந்து 200 லிட்டர் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,50,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1725/2019/எச்1)

பொருள்– 05. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் TN-47-X-0031 என்ற எண்ணுள்ள வாகனத்திற்கு தகுதிசான்று பெறுவதற்கு பழுதுநீக்கம் செய்ய நாள்–12.06.2019.ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன் அடிப்படையில் கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | செலவினம் |
|---|---|---|
| 1) | JANATHA AUTO DIESEL WORKS,<br>No.32A, Pookkollai street, Tanjore road, Trichy – 620 008 | Rs. 123900/- |
| 2) | DOMINIC AUTO GARAGE, 23,Anbil Dharmalingamnagar,<br>Edamalaipatti Pudor, Trichirappalli – 620 012 | Rs.139830/- |

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). இச்செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3). இந்நகராட்சி பொது சுகாதார அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள JANATHA AUTO DIESEL WORKS நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும், பில்பட்டியல்படி தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.482/2019/எச்1)

பொருள்– 06. குளித்தலை நகராட்சிப் பகுதியில் தமிழக அரசின் சிறப்பு திட்டமான ''மழைநீர் சேகரிப்பு'' திட்டத்தினை செயல்படத்திட ஏதுவாக பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான அறிவிப்பு மற்றும் ஸ்டிக்கர்கள் கீழ்க்கண்ட விபரப்படி,

| | | |
|---|---|---|
| 1) | மழைநீனர் சேகரிப்பு கட்டமைப்பு புதியதாக ஏற்படுத்துதல் / சீரமைத்தல் அறிவிப்புகள் (60x100) | 600 |
| 2) | மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைக்கப்பட்டதன் மல்டி கலர் ஸ்டிக்கர் | 8000 |
| 3) | மழைநீரை சேமிப்போம், குடிநீர் பெறுவோம் என்ற மல்டி கலர் ஸ்டிக்கர் | 8000 |

கலர் ஸ்டிக்கர் ரூ.92,200/–ஐ செலவினத்தில் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வ் நிறுவனம் மூலம் வாங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1459/2019/இ1)

பொருள்– 07. குளித்தலை நகராட்சி ஈப்பு வாகனம் TN-47-X-3173.ன் பழுதுகள் சரிபார்க்க மன்ற தீர்மானம் எண்.101, நாள்–28.05.2019.ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி அவசர அவசியம் கருதி அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையான ரீத்தா ஆட்டோ கேரேஜ், திருச்சி நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ள 11.06.2019.ல் உத்தரவு வழங்கப்பட்டது. அதன்படி பழுது பார்ப்பு பணிகளுக்கான பட்டியல் ரூ.2,65,068/– நாள்–25.07.2019.ன்படியான தொகையினை ரீத்தா ஆட்டோ கேரேஜ் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1154/2019/இ1)

பொருள்– 08. குளித்தலை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்ட காப்பீடு மற்றும் செயலாக்கம் தொடர்பான புகைப்படங்கள் தயார் செய்து, நகராட்சி நிர்வாக ஆணையரகம் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம் அனுப்புவதற்கு, ராம் கம்ப்யூட்டர்ஸ் நிறுவனத்தின்மூலம் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ் பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டது. இந்நிறுவனத்திற்கு தொகை ரூ.15000/– வழங்கியதையும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.707/2019/எச்1)

பொருள்– 09. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளில் உள்ள தெருக்களில் சுற்றித்திரியும் தெருநாய்களை பிடித்து இனப்பெருக்கத் தடை (ABC) அறுவை சிகிச்சை செய்வதற்கு மன்ற தீர்மானம் எண்.107, நாள்–28.05.2019.ல் மன்றம் அனுமதி அளித்துள்ளது. அதன்படி கீழ்க்கண்ட நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | இனப்பெருக்க தடை (ABC) செய்வதற்கு 1 நாய்க்கு ரூபாய் |
|---|---|---|
| 1) | Cage The Crvelty Heart to Heart Vet Foundation, Govt., Recog.No.6/14, No.410,Seagull V.G.P.Layout, Uthandi East coast road, Chennai – 600 119 | ரூ.750/– |
| 2) | Hands for Animals Charitable Trust (Chennai) Rc.No.51/2013, No.71, Third street Ambedkarnagar, Chennai – 600 058 | ரூ.725/– |
| 3) | Voice For Animals Charitable Trust, Govt. of Tamil Nadu Regis.No.67/15, No.1/1,Letangs Vepery, Chennai – 600 007. | ரூ.700/– |

அலுவலக குறிப்பு– 1). குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Voice For Animals, Chennai நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.
2). இச்செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1024/2019/எச்1)

பொருள்– 10. குளித்தலை நகராட்சி பொறியியல் பிரிவில் பொதுவான விளம்பரங்கள் மற்றும் ஒப்பந்தப் பணி விளம்பரங்கள் செய்வதற்கான ஆகஸ்ட் 2019 முதல் ஓராண்டிற்கான விளம்பர கட்டண உத்தேச செலவினம் ரூ.5.00 லட்சம் வரையில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1585/2019/இ1)

பொருள்– 11. குளித்தலை நகராட்சிப் பகுதியில் தென்கரை வாய்க்காலில் ஐந்து இடங்களில் கழிவுநீர் கலக்கும் முன்னர் சுத்திகரிப்பு செய்து வாய்க்காலில் விடுவிக்க அமைப்புகள் ஏற்படுத்த மதிப்பீடு தயாரித்தல் பணிக்கு ரூ.1.75 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்ற தீர்மான எண்.118, நாள்–28.06.2019.ல் அனுமதி பெற்று 04.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி தென்கரை வாய்க்காலில் ஐந்து இடங்களில் கழிவுநீர் கலக்கும் முன்னர் சுத்திகரிப்பு செய்து வாய்க்காலில் விடுவிக்க அமைப்புகள் ஏற்படுத்த மதிப்பீடு தயார் செய்தல். | 1) M.சத்தியமூர்த்தி, 20ஏ,பள்ளிவாசல்தெரு, திருச்சிமெயின்ரோடு, குளித்தலை. | ரூ.175000/– |
| | | 2) J.பிரபாகரன், 24,ஆஸ்பத்திரிகடைதெரு, குளித்தலை. | ரூ.177000/– |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.M.சத்தியமூர்த்தி ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.624/2019/இ1)

பொருள்– 12. குளித்தலை நகராட்சிப் பகுதியில் நாப்பாளையம் தலைமை நீரேற்று நிலைய குடிநீர் குழாய் நடைபாலத்தின்கீழ் காவேரி ஆற்றில் உள்ள பழுதடைந்த தூண்களை பழுது சரிசெய்தல் பணிக்கு ரூ.7.75 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்ற தீர்மான எண்.120, நாள்–28.06.2019.ல் அனுமதி பெற்று 30.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | நாப்பாளையம் தலைமை நீரேற்று நிலைய குடிநீர் குழாய் நடைபாலத்தின்கீழ் காவேரி ஆற்றில் உள்ள பழுதடைந்த தூண்களை பழுது சரிசெய்தல் பணி | திரு.ஜெயபிரகாஷ், குளித்தலை. | 0.06% குறைவு |
| | | திரு.M.செந்தில்குமார், குளித்தலை. | 0.51% அதிகம் |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு 0.06% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.ஜெயபிரகாஷ், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1450/2019/இ1)

பொருள்– 13. குளித்தலை நகராட்சிப் பகுதியில் பெரியார்நகர் தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீர் குழாய் நடைபாலத்தின்கீழ் காவேரி ஆற்றில் உள்ள பழுதடைந்த தூண்களை பழுது சரிசெய்தல் பணிக்கு ரூ.9.60 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்ற தீர்மான எண்.124, நாள்–28.06.2019.ல் அனுமதி பெற்று 30.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | பெரியார்நகர் தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீர் குழாய் நடைபாலத்தின்கீழ் காவேரி ஆற்றில் உள்ள பழுதடைந்த தூண்களை பழுது சரிசெய்தல் | திரு.M.செந்தில்குமார், குளித்தலை. | 0.04% குறைவு |
| | | திரு.ஜெயபிரகாஷ், குளித்தலை. | 0.56% அதிகம் |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு 0.04% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.M.செந்தில்குமார், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1451/2019/இ1)

பொருள்– 14. குளித்தலை நகராட்சிப் பகுதியில் குடிநீர் விநியோகம் செய்யும் மெயின்லைன், வால்வ் பராமரிப்பு உள்ளிட்ட பணி ஓராண்டிற்கு ரூ.6.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்ற தீர்மான எண்.125, நாள்–28.06.2019.ல் அனுமதி பெற்று 30.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | குடிநீர் விநியோகம் செய்யும் மெயின் லைன், வால்வ் பராமரிப்பு உள்ளிட்ட பணிகள் ஓராண்டிற்கு செய்தல் | திரு.M.செந்தில்குமார், குளித்தலை. | 0.10% குறைவு |
| | | திரு.R.N.வெங்கடாஜலபதி, குளித்தலை. | 1.06% அதிகம் |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு 0.10% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.M.செந்தில்குமார், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1452/2019/இ1)

..5..

பொருள்– 15. குளித்தலை நகராட்சிப் பகுதியில் குடிநீர் பணி மற்றும் இதர பணிகளுக்கு தேவையான 6 பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஓராண்டிற்கு சப்ளை செய்தல் பணிக்கு ரூ.9.50 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்ற தீர்மான எண்.104, நாள்–28.05.2019.ல் அனுமதி பெற்று 30.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | குடிநீர் பணி மற்றும் இதர பணிகளுக்கு தேவையான 6 பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஓராண்டிற்கு சப்ளை செய்தல் | M/s.நந்தினி ஏஜன்ஸிஸ், குளித்தலை. | 0.04% குறைவு |
| | | M/s.ஸ்ரீபார்கவி ஏஜன்ஸிஸ், குளித்தலை. | 0.46% அதிகம் |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு 0.04% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.நந்தினி ஏஜன்ஸிஸ் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1066/2019/இ1)

பொருள்– 16. குளித்தலை நகராட்சி அலுவலக கணினி பயன்பாட்டிற்கு தேவையான டோனர், கலர்(BYM) இங்க் பாட்டில் சப்ளை செய்தல் பணி மேற்கொள்ள 09.07.2019.ல் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று 16.07.2019 அன்று விலைப்புள்ளி பெறப்பட்டது. அதன்படி 3 விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | | |
|---|---|---|---|---|
| | | கோல்டன் இன்போடெக், மதுரை | எச்.ஐ.எல். டெக்னாலஜிஸ், மதுரை. | லேப் ஒன் சொல்யூசன், மதுரை |
| | | (ஒன்றின் விலை) | | |
| 1) | 28 காம்பாடிபின் டோனர் கேட்ரிஜ் | ரூ.5500/– | ரூ.7200/– | ரூ.6300/– |
| 2) | எப்சன் L380 பிரிண்டர் கலர்பிரிண்டர் இங்க் | ரூ.4750/– | ரூ.6250/– | ரூ.5850/– |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்ட விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், குறைவாக விலைப்புள்ளி வழங்கியுள்ள M/s.கோல்டன் இன்போடெக், மதுரை விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1571/2019/இ1)

பொருள்– 17. குளித்தலை நகராட்சிப் பகுதியில் பாராளுமன்ற தேர்தல் வாக்குப்பதிவு நடைபெறும் வாக்குபதிவு மையங்களில் அடிப்படை வசதிகள் செய்ய வேண்டி உள்ளது. எனவே, அவசர அவசியம் கருதி குடிநீர் வசதிகள் செய்ய இரும்பு ஸ்டாண்ட் அமைத்து சின்டெக்ஸ் டேங் வைப்பதற்கான பணி, தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ் மேற்கொள்ளப்பட்டதினையும், திரு.எம்.செந்தில்குமார் ஒப்பந்ததாரருக்கு பட்டியல்தொகை ரூ.86,079/– வழங்கியதையும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும்.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.773/2019/இ1)

பொருள்– 18. குளித்தலை நகராட்சிப் பகுதியிலான மாரியம்மன்கோவில் திருவிழாவிற்கு பெரியபாலம், மாரியம்மன்கோவில் துறை, கடம்பர்கோவில்துறை மற்றும் மணத்தட்டை துறை பகுதிகளில் குடிநீர், மின்விளக்கு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்யும் பணி அவசர அவசியம் கருதி, தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ் மேற்கொள்ளப்பட்டது. பணி மேற்கொண்டது மற்றும் திரு.எம்.செந்தில்குமார், ஒப்பந்ததாரருக்கு பட்டியல் தொகை ரூ.2,80,000/– வழங்கியதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும்.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.857/2019/இ1)

பொருள்– 19. இந்நகராட்சிக்குக் கட்டுப்பட்ட அனைத்து பணிகள் மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்படும் வருமானவரி பிடித்தங்கள் குறித்த 'Filing Process' மற்றும் 'GST' தொடர்பான பிடித்தங்களுக்குரிய தொகைகள் செலுத்துவதற்கும், 'சேவைவரி' தொடர்பான அனைத்து பிடித்தங்களையும் அரசு கணக்கில் செலுத்துவதற்குரிய பணிகள் 2019–2020.ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ள ஏற்கனவே 'GST', 'Filing Process' மேற்கொள்ளும் திரு.T.சண்முகமூர்த்தி, Consultancy மூலம் பணிகள் மேற்கொள்ள, அன்னாருக்கு 2019–2020.ஆம் நிதி ஆண்டிற்குரிய கட்டணம் ரூ.74000/–ம் மற்றும் GST வரியுடன் சேர்த்து வழங்குவதற்கும் மன்றத்தின் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). மன்றம் அனுமதி வழங்கலாம்.
2). 2019–2020.ஆம் நிதி ஆண்டிற்கு, திரு.சண்முகமூர்த்தி, Consultancy மூலம் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3). செலவினம் ரூ.74000/– மற்றும் GST வரியுடன் சேர்த்து வழங்குதற்கும், மேற்படி செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1658/2019/பி1)

*******

# <u>குளித்தலை நகராட்சி</u>

31.07.2019.ஆம் தேதிய சாதாரணக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 136 | பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 137 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 3 | 3 | 138 | அலுவலக குறிப்பு அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 4 | 4 | 139 | அனுமதிக்கப்பட்டது. |
| 5 | 5 | 140 | அலுவலக குறிப்பு அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 6 | 6 | 141 | அலுவலக குறிப்பு அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 7 | 7 | 142 | அலுவலக குறிப்பு அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 8 | 8 | 143 | பதிவு செய்யப்பட்டது. |
| 9 | 9 | 144 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| 10 | 10 | 145 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 11 | 11 | 146 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 12 | 12 | 147 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 13 | 13 | 148 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 14 | 14 | 149 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 15 | 15 | 150 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 16 | 16 | 151 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 17 | 17 | 152 | பதிவு செய்யப்பட்டது. |
| 18 | 18 | 153 | பதிவு செய்யப்பட்டது. |
| 19 | 19 | 154 | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/– மு.கார்த்திகேயன்,
நகராட்சி பொறியாளர்,
ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர்(பொ),
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்(பொ),
குளித்தலை நகராட்சி.